பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
03 10 2023 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் வளர்ச்சி உலக பொருளாதார முன்னேற்றத்திற்கு உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கோவையில் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடன் உதவிகளை இன்று வழங்குகிறார்.
- கிராம சபைக் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கைகள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.
- மகளிர் உரிமைத் தொகை கிடைக்கப் பெறாதவர்கள் இம்மாதம் 18ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.
- ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா நேற்று மேலும் 3 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

---இனி விரிவான செய்திகள்---

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சி உலக பொருளாதார முன்னேற்றத்திற்கு உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் குவாலியரில் நேற்று, 19 ஆயிரத்து 260 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைத்து அவர் உரையாற்றினார்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் இந்திய பொருளாதாரம் உலகின் ஐந்தாவது இடத்திற்கு உயர்ந்துள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா நிச்சயம் உருவாகும் என தாம் உத்தரவாதம் அளிப்பதாகவும் கூறினார்.

மத்தியிலும், மத்தியப்பிரதேச மாநிலத்திலும் அமைந்துள்ள பிஜேபி அரசுகள் ஒன்றிணைந்து செயல்படுவதால் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி இருமடங்காக உயர்ந்துள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

பிஜேபி அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளதாக தெரிவித்த பிரதமர், இதுவரை நான்கு கோடி பேருக்கு நிரந்தர வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ், பெண்களுக்கு வீடுகள் கட்டித்தரப்படுவதாக தெரிவித்த பிரதமர், அவர்களின் வாழ்வாதாரத்தையும், அவர்கள் குழந்தைகளின் பாதுகாப்பையும் உறுதி செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

மகளிருக்கான அதிகாரம் அளித்தல், வாக்கு அரசியலுக்காக அல்ல என்றும், உண்மையில் சமுதாய மாற்றத்தை கொண்டுவருவதற்கான சக்தியை பெண்களுக்கு வழங்குவதாகும் என்று குறிப்பிட்டார்.

விவசாயிகளின் நலனுக்கான திட்டங்களையும் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தி வருவதாக கூறினார்.

சிறுதானிய உற்பத்தியை ஊக்குவித்து, சிறு-குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் நாட்டில் கைவினைஞர்கள் மற்றும் தொழிலாளர்களின் நலனுக்காக கொண்டுவரப்பட்ட விஷ்வகர்மா திட்டம் மக்களிடையே புதிய ஆற்றலையும், உற்சாகத்தையும் அளித்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று கோவையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

பீளமேடு பகுதியில் காலையில் நடைபெறும் தூய்மை பாரத நிகழ்ச்சியில் அவர் கலந்துகொள்கிறார்.

அதைத்தொடர்ந்து காளப்பட்டி அருகே புதிய வங்கி திறப்பு விழா மற்றும் கொடிசியா அரங்கில் நடைபெற உள்ள மூவாயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடன் வழங்கும் நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்க உள்ளார்.

பின்னர் அங்கு அமைக்கப்பட்டுள்ள ராணுவம் மற்றும் பாதுகாப்புத் தளவாட ஆராய்ச்சி மையத்தையும் அவர் பார்வையிட உள்ளார்.

மாலையில் அவினாசி சாலையில் உள்ள தனியார் மகளிர் கல்லூரியில் நடைபெறும் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் திருமதி நிர்மலா சீதாராமன் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியாவின் நிலை நாள்தோறும் அதிகரித்து வருவதாகவும், முன்னணி நாடுகளுடன் இத்துறையில் போட்டியிட்டு வருவதாகவும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கான பாராட்டு நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றுப் பேசினார்.

கடந்த காலத்தில் நாசா மற்றும் இதர விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்கள் முன்னோடியாக திகழ்ந்த நிலையில், தற்போது உலகில் விண்வெளி ஆராய்ச்சியில் இஸ்ரோ முன்னணி வகித்து வருவதாக அவர் கூறினார்.

அமெரிக்கா – ரஷ்யா போன்ற நாடுகள் விண்வெளித் துறையில் இந்தியாவுடன் தற்போது கூட்டாண்மை ஏற்படுத்த விரும்புவதாக டாக்டர் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

கிராம சபைக் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கைகள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் ஊரணிதாங்கல் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் அவர் பங்கேற்றார்.

தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு நலத்திட்டங்களை அப்போது அவர் பட்டியலிட்டார்.

மக்களின் அனைத்து குறைகளுக்கும் தீர்வு காண வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையுடன் தமிழக அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பின்னர் பயனாளிகளுக்கு மத்திய அரசின் காப்பீட்டு அடையாள அட்டை, வேளாண்துறை சார்பில் விவசாயிகளுக்கு தென்னைமரக் கன்றுகள் ஆகியவற்றையும் திரு. செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

<<<<>>>>

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே புதுக்குப்பம் மீனவ கிராமத்தில் 9 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அலை தடுப்புச் சுவர் மற்றும் மீன் ஏலக்குடத்தை மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் திறந்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து பெருந்தோட்டம் ஏரியில் சுற்றுலா மையம் அமைப்பதற்கான திட்டம் குறித்து அவர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இதற்கான திட்ட வரைவுகளை தயார் செய்யுமாறு பொதுப்பணித்துறை அதிகாரிகளை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மகளிர் உரிமைத் தொகை கிடைக்கப் பெறாதவர்கள் இம்மாதம் 18ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம் அருகேயுள்ள வில்லுமரத்துப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

பிள்ளைகளைப் பெற்றோர் கண்காணிக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு உரிய வயதில் மட்டும் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மகளிர் மற்றும் கர்ப்பிணிகள் ஊட்டச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தினார்.

முன்னதாக வேளாண் மற்றும் வருவாய்த்துறை சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை திருமதி கீதா ஜீவன் வழங்கினார்.

<<<<>>>>

கட்சித் தொண்டர்களின் உணர்வை மதிக்கும் வகையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து அஇஅதிமுக விலகியுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் திருவாக்கவுடனூரில் நடைபெற்ற வாக்குச்சாவடி நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டார்.

பின்னர் பேசிய அவர், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அஇஅதிமுக மிகப்பெரிய கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்கும் என்று அவர் கூறினார்.

தமிழக மக்களின் உரிமைக்காக தமது கட்சி தொடர்ந்து போராடும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டார்.

<<<<>>>>

சேலம் மாவட்டத்தில் உள்ள 385 ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டம் நேற்று சிறப்பான முறையில் நடைபெற்றது.

பிரதமரின் வீட்டு வசதித் திட்டம், எழுத்தறிவுத் திட்டம், நீர்வளத் திட்டம் உள்ளிட்டவை குறித்து பொதுமக்களுக்கு இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

மக்களின் கோரிக்கைகளை அரசு அலுவலர்களுக்கு தெரிவிக்கும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள் அமைந்துள்ளதாக டி.பெருமாபாளையும் ஊராட்சி மன்ற தலைவர் திரு. சங்கர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

சர்வதேச பெட்ரோலிய கண்காட்சி மற்றும் மாநாடு நேற்று அபுதாபியில் தொடங்கியது.

<<<<>>>>

**Alliance Air** விமான நிறுவனம் தமது 200வது சென்னை – யாழ்ப்பாணம் இடையே இயக்கப்படும் விமான சேவையை நிறைவு செய்துள்ளதாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

“போதைப் பொருள் இல்லா மாநிலம் ஹரியானா” என்ற இயக்கத்தை அறிய செய்யும் வகையில் அம்மாநிலத்தைச் சேர்ந்த காவல்துறை துணை ஆய்வாளர் திரு. ராம்லால் ஷர்மா கிளிமாஞ்சாரோ மலைச் சிகரத்திற்கு புறப்பட்டார்.

<<<<>>>>

பழங்குடியின மாணவர்களுக்கான தேசிய கல்விச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகளின் கலாச்சார, இலக்கிய கலைவிழா டேராடூனில் இன்று தொடங்கி 6ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

<<<<>>>>

கடந்த மாதம் வரை வருமான வரித்துறையின் இ-ஃபைலிங் இணையதளத்தில் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட தணிக்கை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கனமழை காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கரூர் மாவட்டம் க. பரமத்தி கிராம ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் தூய்மை பாரத இயக்கம், நீர்வள இயக்கம், பிரதமரின் ஊரக குடியிருப்புத் திட்டம் உள்ளிட்டவைகளை சிறப்பாக செயல்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

<<<<>>>>

மலேசியாவில் இருந்து ராட்சத அணில்களை கடத்தி வந்த 3 பேரை திருச்சி விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

<<<<>>>>

*__விளையாட்டுச் செய்திகள்__*

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா நேற்று மேலும் 3 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் நீளம் தாண்டுதல் பிரிவில் **Ancy Sojan,** 6 புள்ளி ஆறு மூன்று மீட்டர் நீளம் தாண்டி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

400 மீட்டர் கலப்புக்குழு தொடர் ஓட்டத்தில் முகமது அஜ்மல், வித்யா ராம்ராஜ், ராஜேஷ் ரமேஷ், சுபா வெங்கடேசன் ஆகியோர் கொண்ட குழு வெள்ளிப் பதக்கம் வென்றது.

ஹாக்கிப் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா 12-0 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்றது.

இன்று நடைபெற உள்ள கிரிக்கெட் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா – நேபாளை எதிர்கொள்கிறது.

கபடிப் போட்டியில் இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது. மகளிர் பிரிவில் கொரியாவை எதிர்கொள்கிறது.

மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா - ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

மகளிர் குத்துச்சண்டை அரை இறுதிச் சுற்றில் ப்ரீத்தி பவார், லவ்லினா போர்கோஹைன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

குத்துச்சண்டை ஆடவர் பிரிவு அரை இறுதிச் சுற்றில் நரேந்தர் டெர்வால் இன்று பங்கேற்கிறார்.

இந்தியா இதுவரை 13 தங்கம், 24 வெள்ளி, 23 வெண்கலம் உட்பட மொத்தம் 60 பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<>>>>